OPEN ACCESS

Manuscript ID:
TAM-11022026-11408

Volume: 11

Issue: 2

Month: October

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 04.08.2026

Accepted: 15.09.2026

Published: 01.10.2026

Citation:
Sankara Narayanan, K. "'Puniru' in the Tamil Grammatical and Literary Tradition." *Shanlax International Journal of Tamil Research*, vol. 11, no. 2, 2026, pp. 14–22.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i2.11408

*Corresponding Author:
krksankaraatamil@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

'Puniru' in the Tamil Grammatical and Literary Tradition

K. Sankara Narayanan
Assistant Professor & Head (i/c), Sangappalagai for Tamil Development
University of Madras, Chennai
http://orcid.org/0000-0002-6260-8164

Abstract
Every word in a language embodies the records of the life, culture, and thought of a particular period. In this context, the word Puniru found in ancient Tamil stands as a significant lexical element. This word occurs in grammatical works, lexicons, and Sangam literature in various contexts. In the grammatical tradition, the grammatical category and usage of this word are worthy of examination. Lexicons record the meanings associated with Puniru and thereby expand its semantic field. The contexts in which this word occurs in Sangam literature help clarify its contextual meaning. Furthermore, the usages associated with Puniru reveal aspects of the life and culture of the ancient Tamils. The changes and expansions that have occurred in the semantic field of this word over time reflect the development of the Tamil language. Therefore, this article examines the origin, semantic field, and usage patterns of the word Puniru. Through this study, the linguistic and cultural significance of the word Puniru is brought to light.

Keywords: *Puniru. Punirru, Adjective, Tholkappiyam, Neminatham, Sangam Literature, Patthuppattu, Etthuthokai, Maternity, Child.*

References

1. Aravinthan.Mu.Vai., Uraiaashiriyargal, 2008,Chennai, Manivasagar Publications.
2. Elampooranar Urai., Tholkappiya Porulathikaaram Moolamum Uraium, 2010, Chennai, Saratha Publication.
3. Gunaveera Pandithar, Neminaatham, 1956, Tirunelveli, Saiva Sidhthantha Noor Pathippu Kalagam.
4. Sangam Literature, Ettuthogai - Vol I, 2014, Chennai New Century Book House.
5. Sangam Literature, Ettuthogai - Vol II, 2014, Chennai New Century Book House.
6. Sangam Literature, Ettuthogai - Vol III, 2014, Chennai New Century Book House.
7. Sangam Literature Patthupattu - Vol I, 2014, Chennai New Century Book House.
8. Sangam Literature Patthupattu - Vol II, 2014, Chennai New Century Book House.
9. Subramaniam.Sa.Ve.Su., Sangam Literature, 2006, Chennai, Manivaasagar Publication.
10. Subramaniam.Sa.Ve.Su., Tamil Nigandukal Vol-I, 2014, Chennai, Manivasagar Publication.
11. Subramaniam.Sa.Ve.Su., Tamil Nigandukal Vol-II, 2014, Chennai, Manivasagar Publication.
12. Sirpi Balasubramaniyan & Neelapathmanaban, Puthiya Nokki Tamil Ilakkiya Varalaru, New Delhi, Sakthiya Academy.

13. Tamillannal, Tholkappiyam Ezhuthathikaaram, Vol – I, 2006, Chennai, Manivasagar Publications.
14. Tamillannal, Tholkappiyam Cholathikaaram, Vol – II, 2006, Chennai, Manivasagar Publications.
15. Tamillannal, Tholkappiyam Porullathikaaram, Vol – III, 2006, Chennai, Manivasagar Publications.

தமிழ் இலக்கண மற்றும் இலக்கிய மரபில் 'புனிறு'

கி. சங்கர நாராயணன்
உதவிப் பேராசிரியர், துறைத்தலைவர்
தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

ஆய்வுச் சுருக்கம்
மொழியில் இடம்பெறும் ஒவ்வொரு சொல்லும் ஒரு குறிப்பிட்ட காலத்தின் வாழ்வியல், பண்பாடு மற்றும் சிந்தனைப் பதிவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவ்வகையில், பழந்தமிழில் வழங்கிய 'புனிறு' என்ற சொல் சிறப்புமிக்க சொல்வளக் கூறாக விளங்குகிறது. இச்சொல் இலக்கண நூல்கள், நிகண்டுகள் மற்றும் சங்க இலக்கியங்களில் பல்வேறு நிலைகளில் இடம்பெற்றுள்ளது. இலக்கண மரபில் இச்சொல்லின் சொல்வகை மற்றும் பயன்பாட்டுத்தன்மை ஆராயத்தக்கதாக அமைகிறது. நிகண்டுகள் 'புனிறு' என்பதற்குரிய பொருள்களைப் பதிவு செய்து அதன் பொருள்புலத்தை விரிவுபடுத்துகின்றன. சங்க இலக்கியங்களில் இச்சொல் இடம்பெறும் தொடர்கள் அதன் சூழல்சார் பொருளைத் தெளிவுபடுத்துகின்றன. மேலும், 'புனிறு' தொடர்பான பயன்பாடுகள் பழந்தமிழரின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டுச் செய்திகளை வெளிப்படுத்துகின்றன. காலந்தோறும் இச்சொல்லின் பொருள்புலத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் விரிவாக்கங்களும் மொழி வளர்ச்சியைக் காட்டுகின்றன. எனவே, இக்கட்டுரை 'புனிறு' என்ற சொல்லின் வருகைமுறை, பொருள்புலம் மற்றும் பயன்பாட்டு நிலைகளை ஆராய்கிறது. இவ்ஆய்வின் வழியாக, 'புனிறு' என்ற சொல்லின் மொழியியல் மற்றும் பண்பாட்டு முக்கியத்துவம் வெளிக்கொணரப்படுகிறது.
திறவுச்சொற்கள்: *புனிறு, புனிற்று, உரிச்சொல், தொல்காப்பியம், நேமிநாதம், சங்க இலக்கியம், பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, மகப்பேறு, மகவு.*

முன்னுரை

மொழி என்பது ஒரு சமூகத்தின் வாழ்வியல் அனுபவங்களையும், பண்பாட்டு நினைவுகளையும், காலந்தோறும் நிகழும் சிந்தனை மாற்றங்களையும் தன்னகத்தே பதிவு செய்து பாதுகாக்கும் உயிர்ப்புமிக்க அமைப்பாகும். ஒரு சொல்லின் பொருளை அறிதல் என்பது அதன் அகராதிப் பொருளை மட்டும் அறிதலன்று; அச்சொல் தோன்றிய சமூகப் பின்னணி, இலக்கணப் பயன்பாடு, இலக்கியச் சூழல், பொருண்மை மாற்றம், வழக்காற்று நிலை ஆகியவற்றையும் இணைத்துப் புரிந்துகொள்வதாகும் இவ்வகையில், பழந்தமிழ் இலக்கியங்களில் இடம் பெறும் சொற்கள் தமிழரின் வாழ்வியல், பண்பாடு, சடங்கு, சமூக அமைப்பு ஆகியவற்றை அறிந்து கொள்வதற்கான முக்கியமான மொழியியல் சான்றுகளாக விளங்குகின்றன. அத்தகைய பழந்தமிழ்ச் சொற்களுள் புனிறு என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இச்சொல் சங்க இலக்கியங்களில் பல்வேறு சூழல்களில் இடம்பெற்று, குறிப்பிட்ட வாழ்வியல் நிலை, குறிப்பாக மகப்பேறு மற்றும் அதனையொட்டிய சமூக - பண்பாட்டு நிலைகளைப்புலப்படுத்துவதாகஅமைந்துள்ளது. எனினும், 'புனிறு' என்ற சொல்லின் பொருள் ஒரு குறிப்பிட்ட ஒற்றைப் பொருளில் மட்டுமே நிலைபெற்றதாகக் கருத முடியாது. இலக்கியச் சூழல், தொடரமைப்பு, உரையாசிரியர்களின் விளக்கம், நிகண்டு மரபு, இலக்கணப் பயன்பாடு ஆகியவற்றின்

அடிப்படையில் இச்சொல்லின் பொருள்புலம் விரிவடைந்து காணப்படுகிறது. எனவே, இச்சொல்லைத் தனித்த நிலையில் நோக்காமல், அதன் வரலாற்றுப் பயன் பாட்டையும் பொருண்மைவளர்ச்சியையும் ஆராய்வது அவசியமாகிறது.

தமிழ் இலக்கண மரபில் சொற்கள் அவற்றின் இயல்பு, பயன்பாடு, பொருள் மற்றும் இலக்கியச் செயல்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களும், அவற்றைத் தொடர்ந்து தோன்றிய இலக்கண மரபுகளும் சொற்களின் பயன்பாடு மற்றும் பொருள் மாற்றங்களைப் புரிந்துகொள்வதற்கான அடித்தளங்களை வழங்குகின்றன. அதே போன்று, நிகண்டுகள் ஒரு சொல்லுக்குரிய பல்வேறு பொருள்களையும், அதனுடன் தொடர்புடைய சொற்களையும் தொகுத்து வழங்கும் அகராதி மரபின் முன்னோடிகளாகத் திகழ்கின்றன. எனவே, 'புனிறு' என்ற சொல்லின் பொருள்புலத்தை ஆராய்வதில் இலக்கண நூல்களும் நிகண்டுகளும் முதன்மையான ஆதாரங்களாக அமைகின்றன.

இதனுடன், சங்க இலக்கியங்கள் 'புனிறு' என்ற சொல்லின் நடைமுறைப் பயன் பாட்டையும், அதன் பொருள் வெளிப்படும் பல்வேறு சூழல்களையும் அறியச் சிறந்த முதன்மைச் சான்றுகளாக விளங்குகின்றன. சங்கப் பாடல்களில் இடம்பெறும் 'புனிறு இல்', 'புனிறு தீர்', 'புனிறு போகிய' போன்ற தொடர்கள், இச்சொல் தனிச்சொல்லாக மட்டுமன்றி, பல்வேறு சொற்களுடன் இணைந்து பொருள் நுட்பங்களை உருவாக்கியுள்ளமையை வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, மகப்பேறு, தாய்மை, குடும்ப வாழ்வு, உடல்-சமூக நிலை, சடங்கு மற்றும் வாழ்வியல் ஆகியவற்றோடு தொடர்புடைய பொருண்மைகள் இச்சொல்லின் பயன் பாட்டில் புலப்படுகின்றன.

இக்கட்டுரை 'புனிறு' என்ற சொல்லின் இலக்கண நிலை, நிகண்டு மரபில் வழங்கப்படும் பொருள்கள், சங்க இலக்கியங்களில் காணப்படும் பயன்பாட்டு வடிவங்கள், அவற்றின் சூழல்சார் பொருள்புலம் மற்றும் காலப்போக்கில் ஏற்பட்ட பொருண்மை விரிவாக்கம் ஆகியவற்றை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், இலக்கண நூல்கள் மற்றும் நிகண்டுகளில் இச்சொல் எவ்வாறு பதிவு செய்யப் பட்டிருக்கிறது என்பதையும், சங்க இலக்கியங்களில் அது எந்தெந்த தொடரமைப்புகளிலும் பொருண்மைச் சூழல்களிலும் இடம்பெறுகிறது என்பதையும் ஒப்புநோக்கி ஆராய்கிறது. இவ்ஆய்வின் வழியாகப் 'புனிறு' என்ற சொல்லின் வருகைமுறை, பயன்பாட்டு வரலாறு, பொருள்புல வளர்ச்சி மற்றும் தமிழரின் பழந்தமிழ் வாழ்வியலோடு அதற்குள்ள தொடர்பு ஆகியவற்றை வெளிக்கொணர இயலும்.

தொல்காப்பியம்

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் எட்டாவது இயலான உரியியல் உரிச்சொற்களுக்கு விளக்கம் தருகிறது. தொல்காப்பியர் இப்பகுதியில் நூற்றி இருபது உரிச்சொற்களுக்கு பொருள் விளக்கம் தருகிறார். உரியியலில் புனிறு என்ற சொல்லுக்கான விளக்கத்தையும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். அவை,

புனிறு என் கிளவி ஈன்றணிமை பொருட்டே
(தொல்.சொல்.உரி.858)

புனிறு என்ற சொல் ஈன்றணிமையை உணர்த்தும் சொல் என்று விளக்கம் தருகிறார். மேலும், தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் கற்பியலில் புனிறு என்ற சொல்லின் வருகையினைக் காணமுடிகின்றது.

புதல்வன் பயந்த புனிறு தீர் பொழுதின்
(தொல்.பொருள்.கற்.5:27)

மகனைப் பெற்ற பின்னர், மகப்பேற்றுக்குப் பிந்தைய நிலை நீங்கிய காலம் என்று விளக்கம் கொள்ளப்படுகிறது.

நேமிநாதம்

நன்னூல் உள்ளிட்ட மற்ற இலக்கண நூற்களில் புனிறு என்ற சொல்லினைக் காண இயலவில்லை. நேமிநாதர் எழுதிய நேமிநதத்தில் புனிறு என்ற சொல் இடம் பெறுகிறது.

புரை உயர்பு ஆகும் புனிறு ஈன்றணிமை
(நேமி.சொல்.8 59:1)

ஈன்றதனால் பெற்ற சிறப்பு, மேன்மையை உயர்த்துவதாக அமையும் என்கிறது நேமிநாதம். சங்க இலக்கியமான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டில் புனிற்று, புனிறு ஆகிய இரண்டு சொற்களின் வருகையினைக் காண முடிகின்றன.

நிகண்டுகள்

சேந்தன் திவாரம் உள்ளிட்ட பல நிகண்டுகளில் புனிறு என்ற சொல்லின் வருகையினைக் காணமுடிகின்றது. அவை பின்வருமாறு,

சேந்தன் திவாகரம்

புனிறு ஈன்றணிமை (பண்பு.8 192:1)

கயாதர நிகண்டு

கொண்ட மேற்கோள் ஆகும் பூட்கை
புனிறு ஈன்றணுமை வம்பே
(பண்புப்பெயரியல்:8 49:3)

பாரதிதீபம்

பூணும் புதுமை புனிறு எனில்
ஈன்றணுமைப் பொழுது ஆம்
(பண்பு:8 46:2)

சூடாமணி நிகண்டு

புல்லிய யாணர் வம்பு புனிறு ஒன்பான்
புதுமையின்பேர் (பண்பு: 8 45:4)
அறைந்த சூதகம் ஆசௌசம் புனிறே
ஈன்றணிமையின்பேர் (பண்பு: 8 71:3)

பொதிகை நிகண்டு

அன்னை அனை ஆய் தல்லி மோய்
தள்ளை ஈன்றாள் அம்மை வயின் பொறை
அவ்வை ஆயி பெற்றாள் புனிற்றாய்
தன்னை பயந்தாள் மாதா அம்மனை
பன்னேழும் தாய்பேர் தவ்வையும்
ஆகும் வளர்த்ததாய் செவிலி
(மக்கள்பெயர் 2 36:1-2)
கொத்து உரிவை உரி ஒலியல் அதள்
பொச்சை சருமம் குளிர் துவக்கு புனிறு
வடகம் புறணி போர்வை
(மக்கள்பெயர் 2 57:3)
புதுமை புனை நூதனம் புத்தேள் விருந்து
கோடி புனிறு வம்பு கடி யாணர் நவம்
புதிதும் ஆகும் (பண்புப்பெயர் 7 22:3)

நாமதீப நிகண்டு

பொச்சை தொலி தொக்கு புனிறு உரி
துவக்கு அதள் வார்
(அஃறிணையுயிரில்-சினை 35 32:1)
சூதகம் ஈன்றண்மை புனிறு
(குணம்-உயிர்-மணம் 41 14:4)

சிந்தாமணி நிகண்டு

புனிற்றாவே இளங்கன்றுப்பசு நாமம்
புனாகம் பின்பு (னகரவெதுகை:19 10:3)

நாநார்த்த தீபிகை

பீயூடம் புனிற்றிளங்கற்றாவின் பால்
அமிர்தமும் பேர்
(யகரவெதுகை:12 41:3)
புனிதம் தூய்மை புநர்பூசம் புனிறே
புதுமை ஈன்றணிமை
(னகரவெதுகை:19 5:1)

அபிதான மணிமாலை

புரணி சருமம் புனிறு கிருத்திமம்
(மக்கள்பெயர் 2 362:2)

புனிற்று

சிறுபாணாற்றுப்படை

புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில்
(சிறு.132)

குட்டிகளை ஈன்ற நாய் குரைக்கும், பொலிவற்ற பாழடைந்த சமையலறை என்ற பொருளை இத்தொடர் தருகின்றது.

நற்றிணை

இன் புனிற்று இடும்பை தீர சினம் சிறந்து
(நற்.148:8)

இனிமையான (அல்லது அன்புக்குரிய) குட்டிகளை ஈன்றதால் ஏற்பட்ட துன்பம் என்ற பொருளைத் தருகிறது.

நிறை நீர் புனிற்று புலம் துழைஇ ஆனாய்
(நற்.193:3)

நீர் நிறைந்த வயலில், குட்டி ஈன்ற பன்றியானது நிலத்தைக் கிளறும் என்கிறது.

துய் தலை புனிற்று குரல் பால் வார்பு இறைஞ்சி
(நற்.206:1)

குட்டியை ஈன்ற பெண் விலங்கின் மடியிலிருந்து வரும் பால் போன்ற வெண்மையான கதிர் என்கிறது.

இரும் புனிற்று எருமை பெரும் செவி குழவி
(நற்.271:1)

குட்டி ஈன்ற பெரிய எருமையின் பெரிய காதுகளையுடைய கன்று எனப் பொருளைத் தருகிறது.

கன்று உடை புனிற்று ஆ தின்ற மிச்சில்
(நற்.290:2)

கன்றையுடைய, குட்டி ஈன்ற பசு தின்று மீதமாக விட்ட உணவு என நற்றிணை விளக்குகிறது.

புனிற்று நிரை கதித்த பொறிய முது பாறு
(நற்.329:4)

குட்டி ஈன்ற கால்நடைகளின் கூட்டம் மிகுந்த, புள்ளிகளையுடைய பழைய பாறை என விளக்கம் தருகிறது நற்றிணை.

வய புனிற்று இரும் பிண பசித்து என வய புலி
(நற்.383:3)

குட்டி ஈன்ற பெரிய பெண் விலங்கின் இறைச்சியை உண்ணப் பசியுற்றது போன்ற வலிமைமிக்க புலி எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

ஐங்குறுநூறு

புயல் புறந்தந்த புனிற்று வளர் பைம் காய்
(ஐங். 25:1)

மழை பெய்ததால் புதிதாகத் தோன்றி வளர்ந்த பசுமையான காய் எனப் பொருள் கொள்வது முற்றிலும் புதியப் பொருளைத் தருவதாக உள்ளது. இங்கு புனிற்று என்ற சொல் புதிதாகத் தோன்றிய அல்லது வளர்ந்த என்னும் பொருளில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

கரும் கோட்டு எருமை செம் கண் புனிற்று ஆ
(ஐங். 92:1)

கரிய கொம்புகளையும் சிவந்த கண்களையும் உடைய, குட்டி ஈன்ற எருமை என்று ஐங்குறுநூறு விளக்கம் தருகிறது.

பதிற்றுப்பத்து

துஞ்சுமர குழாஅம் துவன்றி புனிற்று மகள்
(பதி.16:3)

துஞ்சும் மரக்கூட்டம் நெருங்கியிருக்க, பிள்ளை பெற்ற பெண் என்ற பொருளைத் தருகிறது. மேலும், சங்க இலக்கியங்களில் முதன் முதலில் புனிற்று மகள் என்ற சொல்லைப் பதிற்றுப்பத்தே பதிவு செய்வதும் சிறப்புடையதாகும்.

அகநானூறு

மென் புனிற்று அம் பிணவு பசித்தென பைம் கண்
(அகம்.21:17)

மென்மையான, குட்டி ஈன்ற அழகிய பெண் விலங்கு பசியுற்றது போல, பசுமையான கண்களையுடைய

புனிற்று ஆ பாய்ந்து என கலங்கி யாழ் இட்டு
(அகம்.56:11)

கன்றை ஈன்ற பசு பாய்ந்தது போலக் கலங்கி, யாழை இசைத்து

செழும் செய் நெல்லின் சேய் அரி புனிற்று கதிர்
(அகம்.156:3)

செழிப்பான வயலில் விளைந்த நெல்லின் இளம் நெல்மணிகளைக் கொண்ட புதிதாகத்

தோன்றிய நெற்கதிர் என்ற பொருளிலிருந்து இங்கு புனிற்று என்ற சொல் இளமை, புதுமை ஆகிய சொற்களில் கையாளப்படுவதையும் அறியலாம்.

புனிற்று ஆன் தரவின் இளையர் பெருமகன்
(அகம்.338:18)

கன்றை ஈன்ற பசுக்களின் கூட்டத்தை உடைய இளையோரின் தலைவன் என்று அகநானூறு விளக்கம் தருகிறது.

புறநானூறு

பூ ஆர் காவின் புனிற்று புலால் நெடு வேல்
(புறம்.99:6)

பூக்கள் நிறைந்த சோலையில், புதிதாக உருவான, புலால் மணம் வீசும் நீண்ட வேல் என்று பொருள் தருகிறது. இங்கு புனிற்று என்ற சொல் புதியது, புதுமை, புதிய தன்மை ஆகிய பொருளில் வரப்பெற்றுள்ளது.

மெல் மயில் புனிற்று பெடை கடுப்ப நீடி
(புறம்.120:6)

குஞ்சுகளை ஈன்ற பெண் மயில் என்று புறநானூறு விளக்கம் தருகிறது.

புனிறு

நற்றிணை

புனிறு நாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச
(நற்.40:6)

மகப்பேற்றுக்குப் பிந்தைய மணம் வீசும் செவிலித் தாயுடன் மகன் உறங்க எனவும்,

புதல்வன் புல்லி புனிறு நாறும்மே
(நற்.380:4)

மகன் தழுவியதால், மகப்பேற்றுத் தன்மையுடைய மணம் வீசுகிறது எனவும்

பால் ஆர் பசும் புனிறு தீரிய களி சிறந்து
(நற்.393:3)

பால் நிறைந்த, புதிதாக ஈன்ற நிலையிலிருந்த தன்மை நீங்க, மகிழ்ச்சி மிகுந்து எனவும் நற்றிணை பொருள் தருகிறது.

ஐங்குறுநூறு

நல் பொன் அன்ன புனிறு தீர் ஏனல்
(ஐங்.263:1)

நல்ல பொன்னைப் போன்ற நிறத்துடன், புதுமை நீங்கிப் பழுத்த தினைப்புனம் ஆகும். இதில் புனிறு என்ற சொல் இளமை, புதுமை ஆகிய பொருளில் வரப்பெற்றுள்ளது.

கலித்தொகை

புல்லிய புனிறு ஓரீஇ புது நலம் ஏர்தர
(கலி.29:4)

மகப்பேற்றுக்குப் பிந்தைய நிலை நீங்கி, புதிய அழகுத் தோற்றம் என்கிறது. இங்கு புனிறு என்பது மகப்பேற்றுடன் தொடர்புடைய சொல்லாகப் பார்க்கப்படுகிறது.

அகநானூறு

புலம் புனிறு தீர்ந்த புது வரல் அற்சிரம்
(அகம் 273:4)

வயலின் புதுமை நீங்கிய நிலையில் புதிதாக வந்த முன்பனிக்காலம் என்பதாகும். இங்கும் புனிறு என்ற சொல் இளமை, புதுமை ஆகிய பொருளில் வரப்பெற்றுள்ளதை அறியலாம்.

புறநானூறு

புனிறு தீர் குழவிக்கு இலிற்று முலை போல
(புறம்.68:8)

மகப்பேற்றுக்குப் பிந்தைய நிலை நீங்கிய தாய், குழந்தைக்குப் பால் சுரக்கும் நிலையினைக் குறிப்பிடுகிறது புறநானூற்றுப் பாடல்.

மதுரைக்காஞ்சி

புலவு புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு
(மது.602)

மகப்பேற்றுக்குப் பிந்தைய நிலை நீங்கி, சிறப்புற்ற சுற்றத்தாருடன் உறவாடும் நிலையாகும். இங்கு புனிறு என்ற சொல் மகப்பேற்றுக்குப் பின்னதான நிலையினைக் குறிக்கிறது.

குறிஞ்சிப்பாட்டு

துய் தலை வாங்கிய புனிறு தீர் பெரும் குரல்
(குறி.37)

நுண்ணிய முனை வளைந்த, புதுமை நீங்கி முதிர்ச்சி பெற்ற பெரிய நெற்கதிர்

என்ற பொருளில் புனிறு என்ற சொல் இளமை, புதுமை என்ற சொல்லில் வரப்பெற்றுள்ளது.

மலைபடுகடாம்

புலம்பு விட்டு இருந்த புனிறு இல் காட்சி
(மலை.49)

தனிமையை விட்டுத் தங்கியிருந்த, புதுமை இல்லாத தோற்றம் என்கிறது மலை படுகடாம். இங்கு புனிறு என்ற சொல் புதுமை என்ற பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளது.

புயல் புனிறு போகிய பூ மலி புறவின்
(மலை.120)

மழையின் புதுமை அல்லது ஈரப்பதம் நீங்கிய, பூக்கள் மிகுந்த காட்டுப் பகுதி என்ற பொருளில் புனிறு என்ற சொல் இயற்கைச் சூழல் தொடர்பான புதுமை என்ற பொருளில் வரப்பெற்றுள்ளது.

புலந்து புனிறு போகிய புனம் சூழ் குறவர்
(மலை.203)

புதுமை நீங்கிய புனத்தைச் சூழ்ந்து வாழும் குறவர்கள் என்கிறது மலைபடு கடாம். இங்கும் புனிறு என்ற சொல் புதுமை என்ற பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளது.

தொகுப்புரை

புனிறு என்ற சொல் தொல்காப்பியத்தில் இரண்டு இடங்களிலும் நேமிநாதத்தில் ஒரு இடத்திலும் வரப்பெற்றுள்ளது.

சங்க இலக்கியங்களில் புனிற்று என்ற சொல் 17 இடங்களிலும் புனிறு என்ற சொல் 12 இடங்களிலும் வரப்பெற்றுள்ளன.

சங்க இலக்கியங்களில் புனிற்று என்ற சொல் மூன்று இடங்களில் புதிதாகத் தோன்றிய அல்லது வளர்ந்த, இளமை, புதுமை ஆகிய பொருளில் வரப்பெற்றுள்ளது. மற்ற பதிநான்கு இடங்களில் கரு உயிர்த்த உடல் என்ற பொருளிலே வரப்பெற்றுள்ளது.

சங்க இலக்கியங்களில் புனிறு என்ற சொல் ஆறு இடங்களில் இளமை, புதுமை, மகப்பேற்றுக்குப் பிந்தைய நிலை ஆகிய பொருளில் வரப்பெற்றுள்ளது. மற்ற ஆறு இடங்களில் கரு உயிர்த்த உடல் என்ற பொருளிலே வரப்பெற்றுள்ளது. 5 இடங்களில் வரப்பெற்றுள்ள புனிறு என்ற சொல் தாய்க்கும் மகனுக்கான உறவினை வெளிப்படுத்தும் உயர்திணை சார்ந்து வருவதும் இங்குச் சுட்டத்தக்கது.

புனிற்று மகள் என்ற சொல்லினை முதன் முதலாகப் பதிற்றுப்பத்து பதிவு செய்வதும் குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் சங்க இலக்கியங்களில் இடம்பெறுகின்ற புனிறு, புனிற்று ஆகிய சொற்களின் பயன்பாடு அஃறிணை உயிரினங்களை சார்ந்தவையாகவே இங்கு பதிவு செய்யப்படுவதையும் அறிய முடிகிறது.

புனிறு என்ற சொல் பழந்தமிழ்ச் சமூகத்தின் மகப்பேறு, மகப்பேற்றுக்குப் பிந்தைய உடல்நிலை, தீட்டு மற்றும் சடங்கு சார்ந்த வாழ்வியல் ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்புடையது. சங்ககாலச் சமூகத்தில் குழந்தைப் பிறப்பு ஒரு முக்கியமான குடும்ப மற்றும் சமூக நிகழ்வாகக் கருதப்பட்டது. அதன் பின்னர் தாய்க்கு வழங்கப்பட்ட ஓய்வு, தனிமைப்படுத்தல், சடங்கு சார்ந்த நடைமுறைகள் போன்றவற்றைக் குறிக்கும் சொல்வளத்தில் புனிறு இடம்பெற்றுள்ளது.

இதனால், புனிறு என்பது வெறும் பிரசவம் என்ற பொருளை மட்டும் தரும் சொல் அல்ல; பிரசவத்திற்குப் பிந்தைய நிலை, அதனுடன் தொடர்புடைய உடல், சமூக நிலை, மேலும் அந்த நிலை நீங்குதல் ஆகிய கருத்துகளையும் உள்ளடக்கியதாகும்.

புனிறு என்பது சங்க இலக்கியத்தில் காணப்படும் ஒரு முக்கியமான உரிச்சொல் ஆகும். இதன் பொருள் சூழலுக்கேற்ப மாறுபடுகிறது.

புனிறு என்பது பிரசவத்திற்குப் பிந்தைய காலம், குறிப்பாகக் குழந்தை பெற்ற பின் இருக்கும் பிரசவத் தீட்டு அல்லது பிள்ளைப் பேற்றுக்குப் பிந்தைய நிலை என்பது தான் இச்சொல்லின் அடிப்படைப் பொருளாக அமைகிறது.

- புனிறு இல் (பிரசவத்திற்குப் பிந்தைய நிலை இல்லாத)
- புனிறு தீர் (பிரசவத்திற்குப் பிந்தைய காலம் முடிந்த)
- புனிறு போகிய (பிரசவத்திற்குப் பிந்தைய நிலை நீங்கிய)

என்ற பொருள்களை உணர்த்துவதையும் இச்சொல்லின் வழியாக அறிய முடிகின்றது.

இலக்கண நூல்கள், நிகண்டுகள் மற்றும் சங்க இலக்கியங்கள் ஆகிய மூன்று நிலைச் சான்றுகளின் அடிப்படையில் நோக்கும் போது, 'புனிறு' என்ற சொல்லின் பொருள் ஒரே நிலையில் உறைந்ததாக இல்லாமல், பயன்பாட்டுச் சூழலுக்கேற்ப விரிவடைந்து, நுட்பமடைந்து, பல்வேறு பொருண்மை நிலைகளைப் பெற்றுள்ளது என்பது தெளிவாகிறது. அதன் வருகைமுறை மற்றும் பொருள்புல வளர்ச்சியை ஆராய்வதன் மூலம், தமிழ்ச் சொல்லின் வரலாற்றுத் தொடர்ச்சியும், மொழிக்கும் வாழ்வியலுக்கும் இடையிலான நெருங்கிய உறவும் வெளிப்படுகின்றன. இவ்வகையில், 'புனிறு' என்ற சொல் பழந்தமிழின் மொழியியல் வளத்தையும் பண்பாட்டு நினைவையும் ஒருங்கே தாங்கி நிற்கும் முக்கியமான சொல்லாகக் கருதத்தக்கது.

துணைநூற் பட்டியல்

1. அரவிந்தன்.மு.வை, உரையாசிரியர்கள், 2008, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.
2. இளம்பூரணர் உரை, தொல்காப்பிய பொருளதிகாரம் மூலமும் உரையும், 2010, சென்னை, சாரதா பதிப்பகம்.
3. குணவீர பண்டிதர், நேமிநாதம், 1956, திருநெல்வேலி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
4. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 1, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.
5. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 2, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.
6. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 3, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.
7. சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, தொகுதி - 1, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.
8. சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, தொகுதி - 2, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.
9. சுப்ரமணியம்.ச.வே.சு., சங்க இலக்கியம் முழுவதும், 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.
10. சுப்ரமணியம்.ச.வே.சு., தமிழ் நிகண்டுகள் தொகுதி 1, 2014, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
11. சுப்ரமணியம்.ச.வே.சு., தமிழ் நிகண்டுகள் தொகுதி 2, 2014, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.
12. சிற்பி பால சுப்பிரமணியன், நீலபத்மநாபன், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, புதுதில்லி, சாகித்திய அகாதெமி.
13. தமிழண்ணல், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், தொகுதி - 1, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.
14. தமிழண்ணல், தொல்காப்பியம் சொல்லதிகாரம், தொகுதி - 2, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.
15. தமிழண்ணல், தொல்காப்பியம் பொருளதிகாரம், தொகுதி - 3, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.